**<u>செய்தி வெளியீடு: 634</u>** **நாள்: 28.7.2010**

## <u>நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் படித்து மாநில அளவில் முதலிடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.</u>

நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்று 2010ஆம் ஆண்டு நடைபெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றிபெற்ற மாணாக்கர்களில் மாநில அளவில் தலா முதல் 25 இடங்களைப் பிடித்த மாணாக்கர்களுக்கு இன்று (28.07.2010) மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழக அரசின் சார்பில் பாராட்டுப் பத்திரமும், பரிசுத் தொகை ரூபாய் 10 ஆயிரத்தையும் வழங்கி மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரை ஊக்குவிக்க 2007–08ம் ஆண்டு சட்டமன்றத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வுகளில் முதலாவதாக வரும் 25 மாணவ, மாணவியர்க்கு பரிசுத் தொகை தலா ரூபாய் 10 ஆயிரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்குவதோடு, அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு பட்டப்படிப்பு மேற்கொள்ள உதவித்தொகையும் வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

2010ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் (கல்லணை) பயின்ற எஸ். ஜாஸ்மின் என்ற மாணவி 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், தமிழகத்திலேயே முதல் இடம் பெற்றுள்ளார். 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநகராட்சி பள்ளி மாணவி ஒருவர் மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே திருநெல்வேலி மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் (கல்லணை) பயின்ற ஸ்ரீதேவி லட்சுமி என்ற மாணவி மாநகராட்சி பள்ளிகளிலேயே இரண்டாவது இடம் பெற்றுள்ளார். மாணவிகள் ஜாஸ்மின், ஸ்ரீதேவி லட்சுமி ஆகியோரை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் பாராட்டி, தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை ஆகிய செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூபாய் 2 கோடியே 53 இலட்சமும், அரசு மான்யம் ரூபாய் 2 கோடியும் பங்களிப்பாகப் பெற்று “நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி” என்னும் பெயரில் பொது நிதி” ஒன்று ஏப்ரல் 2008–ல் உருவாக்கப்பட்டு அரசு நிதி நிறுவனமான டுபிட்கோ (TUFIDCO)விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து ஈட்டப்படும் வட்டியினைப் பயன்படுத்தி இத்திட்டத்திற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெறும் மாணவ, மாணவியரைத் தேர்வு செய்யவும், திட்டத்தினை செயல்படுத்திடவும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், கடந்த 2007–08 மற்றும் 2008–09ஆம் கல்வி ஆண்டுகளில், 10ஆம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்புகளில் தேர்ச்சி பெற்ற 105 மாணவர்களுக்கு பரிசுத்தொகை தலா ரூபாய் 10 ஆயிரமும், பாராட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. மேலும் இவர்களில் பொறியியல் கல்வி போன்ற உயர்கல்வி பயிலும் 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற 45 மாணவர்களுக்கு விடுதிக்கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் ஆகியவையும் வழங்கப்பட்டது. இந்த கட்டணங்கள் இவர்களின் உயர்கல்வி முழுமைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் பரிசுத் தொகையாக ரூ.10.50 லட்சமும், உணவுக் கட்டணமாக ரூ. 6.21 லட்சமும் மற்றும் விடுதிக் கட்டணமாக ரூ.2.58 லட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2009–10 ஆண்டிற்கு நகராட்சி மற்றும் மாநகராட்சி பள்ளியில் பயின்று முதல் மதிப்பெண் பெற்றுள்ள 30 பத்தாம் வகுப்பு மற்றும் 25 பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தர வரிசைப் பட்டியலின்படி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தரவரிசைப் பட்டியலின்படி, பத்தாம் வகுப்பில் முதலாவதாக வந்த மேற்படி 30 மாணவர்களுக்கும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதலாவதாக வந்த 25 மாணவர்களுக்கும் இன்று (28.07.2010) புனித ஜார்ஜ் கோட்டையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டுப் பத்திரமும், பரிசுத் தொகை ரூபாய் 10 ஆயிரம் வழங்கினார்கள்.

2009–10 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதித் தேர்வுகளில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 30 மாணவ, மாணவியரில் 27 பேர் மாணவியர், 3 பேர் மாணவர்கள். அதே போன்று பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 25 மாணவ, மாணவியரில், 24 பேர் மாணவியர்கள், மாணவர் ஒருவர் ஆகும்.

இந்த கல்வி உதவித் தொகை திட்டம் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த கல்வி உதவித்தொகைத் திட்டம் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியின்போது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு க. அஷோக் வர்தன் ஷெட்டி, நகராட்சி நிர்வாக இயக்குநர் முனைவர் ப.செந்தில்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.